OS.No.39/2017

PW1 –செல்வி

க/பெ.குமரேசன்

நாள். 18.06.2025.

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் 2010 ஆம் வருடம் பொது அதிகார பத்திரம் கொடுத்திருந்த போதிலும் ஒரு வருடம் கழித்து தான் கிரயம் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். அவசரப்பட்டு நிர்பந்தப்படுத்தியோ இந்த கிரயம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரி அல்ல. பொது அதிகார பத்திரத்தில் அருண்குமார், பழனிசாமியும் சாட்சி கையெழுத்து போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். அருண்குமார் என்னுடைய உறவினர் என்றாலும் சரிதான். பழனிசாமி என் கணவருக்கு தெரிந்தவர் என்று சொன்னால் சரியல்ல.

2. இந்த பொது அதிகார பத்திரத்தில் இரண்டு மூன்று பிரதிவாதிகள் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் செய்யவில்லை.எப்போது இந்த கிரய சம்பந்தப்பட்ட விபரங்கள் எனக்கு தெரிய வந்தது என்று தேதி குறிப்பிட்டு நான் பிரமாண பத்திரிக்கையில் அல்லது என்னுடைய எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய பிரமாண பத்திரிக்கை நான் குறிப்பிட்ட இருப்பது போல் சீட்டு பணம் எடுத்ததாகவும் அதில் முறை கேட்டு நடந்ததாகவும் நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.அப்படி முறை கேடு ஏதும் நடக்கவில்லை என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரி அல்ல.

4. என்னுடைய அசல் கிரைய பத்திரமான 1998 கிரய பத்திரத்தை எப்போது யாரிடம் கொடுத்தேன் என்று கேட்டால் பவர் போட்டபோது ரவி மற்றும் ரேனுகா என்பவர் வாங்கினார்.அது 2010 ஆம் ஆண்டிலேயே பவர் கொடுத்தேன்.2010 ஆம் ஆண்டில்

பவர் கொடுத்ததாக நான் சொல்வதை பொய் என்று சொன்னால் சரி அல்ல அந்த சமயத்தில் அவர்கள் வரவே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.2010 இல் பவர் கொடுத்த விவரமும் எனக்கு தெரியும் என்றும் அதேபோல் 2011 கிரையம் போட்ட விவரமும் தெரியும் என்றும் சொன்னால் அது சரி அல்ல அதனை மறைத்து தான் நான் வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. 2011 ல் கிரயம் செய்த விவரம் என்னுடைய மின் இணைப்பு மாறி வந்த போது தான் எனக்கு தெரியும் .அப்போது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் நான் போய் கேட்ட பொது திரும்ப தந்து விடுகிறேன் என்று சொன்னார்கள் ஆனால் தரவில்லை .

6. நான் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி சரியான பிரதிபிரயோஜனம் கொடுத்து தான் கிரயம் செய்திருக்கிறார் என்ற போது பிரதிவாதி கோரியுள்ளபடி தான் அவருடைய மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதி தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.இந்த வழக்கு கால வரைமுறை சட்டத்தின் படி பாதிக்கப்பட்டிருப்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

Digitally signed by V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.